பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 12 | புதன்கிழமை | 29.11.2023 | அதிர்வு 120

## நாடு எதிர்நோக்கும் சவால் முடிவுக்கு வரவில்லையாம்

ஜனாதிபதி தெரிவிப்பு



(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் களமிறங்கவேமாட்டார்!

## நாடாளுமன்றத்தில் இப்படி அடித்துக் கூறினார் விமல்; அரசின் இறுதிப் பயணம் ஆரம்பம் எனவும் தெரிவிப்பு



கொழும்பு, நவம்பர் 29

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என உறுதியாகக் கூறுகின்றேன்."

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

06

## ரணிலின் சூழ்ச்சி வெற்றி பெற எவருமே இடமளிக்கக் கூடாது!

### சபையில் விஜித ஹேரத் வலியுறுத்து



தேர்தல்களை ஒத்திவைக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சூழ்ச்சிகள் வெற்றி பெற எவரும் இடமளிக்கக் கூடாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் வலியுறுத்தினார்.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி

06

### யாழ். நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய

## அலெக்ஸ் சித்திரவதைக்குள்ளான இடங்களில் குற்றத் தடுப்புப் பொலிஸார் தீவிர விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்திரவதைக்குள்ளான நிலையில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தின் உத்தரவுப்படி யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சித்திரவதைக்குள்ளான மற்றைய இளைஞரை சட்டத்தரணிகளின் துணையுடன் கூட்டிச் சென்று

உயிரிழந்த இளைஞரைப் பொலிஸார் சித்திரவதைக்குள்ளாக்கிய இடங்களில் விஞ்ஞான ரீதியான தடயவியல் சோதனைகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன்படி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி

06



## புத்தளத்தில் குளத்தில் இருந்து மீனவர் ஒருவரின் சடலம் மீட்பு!



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – மஹகும்புக்கடவல பகுதியில் உள்ள மோகரிய குளத்தில் இருந்து மீனவர் ஒருவர் நேற்றிரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மஹகும்புக்கடவலையைச் சேர்ந்த தசாநாயக்க முதியன் சேலாகே சுனில் தசாநாயக்க (வயது 51) எனும்

09




மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளில் வழமையாக கம்பீரமாக முன்நின்று பொதுச்சுடர் ஏற்றும் நமது எம்.பி.சிறிதரன் நேற்று முன்தினம்மாவீரர்நாள்நிகழ்வுகளில் படங்களுக்கு போஸ் கொடுக்கவில்லை. சற்று ஒதுங்கிப் பின்னணியில் நின்று நிகழ்வுகளை ஒழுங்குப்படுத்தி, நெறிப்படுத்தி கொண்டிருந்தார். ஆனால் அன்று இரவு திடீரெனக் காணாமல் போனார்.

06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



## சரிவு நிலையில் இருந்து மீண்டிருந்தாலும்

# நாடு எதிர்நோக்கும் சவால் முடிவுக்கு வரவில்லையாம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



நாடு சரிவு நிலையில் இருந்து மீண்டிருந்தாலும், நாம் எதிர்நோக்கும் சவால் முடிவுக்கு வரவில்லை என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்பார்க்கும் இலக்குகளை அடைந்து கொள்ள அனைவரும் ஒற்றுமையாக பொறுமையுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரசியல் கொள்கைகளுக்கு மாறாக அரசமைப்பின் 6 ஆவது அத்தியாத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படை நியதிகளுக்கு அமைவாகவே அரசு செயற்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற 2023 சனச தேசிய மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

"இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு சனச போன்ற நிறுவனங்கள் உந்து சக்தியாக உள்ளன.

மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்பும் அரசின் வேலைத்திட்டத்துடன் அனைத்து அரச மற்றும் தனியார் துறையினரும் இணைந்துகொள்ள வேண்டும்.

சனச வியாபாரத்தை ஆரம்பித்தமைக்காக நாம் கிரிவந்தெனியவுக்கு நன்றி கூற வேண்டும். அவர் ஆரம்பித்த வியாபாரத்தை வெற்றிகரமானதாக மாற்றியுள்ளார். இதனை மேலும் முன்னேற்ற வேண்டும்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தில் சனச வியாபாரத்தையும் இணைத்துக்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்வோம்.

இவ்வருட இறுதிக்கும் சர்வதேச நாணய நிதியம் நமது நாடு கடன்களை நிர்வகிக்கக்கூடிய நிலையானதன்மைக்கு வந்துள்ளதென அறிவிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அதனால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. கடன்களை மீளச் செலுத்துவதற்கான சலுகை வட்டியை கோரிய பின்னர் கடன்களை செலுத்த முடியும். மேலும் புதிய கடன்களை பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்படும்.

இந்தப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல எமக்கு வலுவான பொருளாதாரமொன்று அவசியம். இதன்போது ஏற்றுமதி பொருளாதாரம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டும். இந்த வேலைத்திட்டங்களில் சனச வியாபாரம் இணைந்துகொள்வதை பெரும் உந்து சக்தியாக கருதுகிறோம்.

நாம் ஆட்சியை பொறுப்பேற்றதன் பின்னர், அரசியல் கொள்கைகளுக்கு மாறாக அரசமைப்பின் 6 ஆவது அத்தியாத்துக்கமைவான அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படை நியதிகளுக்கு அமைவாகவே அரசு செயற்படுகின்றது.

அரச மற்றும் தனியார் துறைகளின் பொருளாதார செயற்பாடுகளின் வாயிலாக நாட்டுக்குள் துரிய அபிருத்தியை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாகும். கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் எமக்கு துரித அபிவிருத்தியே அவசியப்படுகிறது.

அனைவருக்கும் போதிய வாழ்வாதாரம் கிடைக்க வேண்டும் என்பதே எமது நோக்கம். நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் பலரும் வாழ்வாதாரத்தை இழந்தனர். சில வியாபாரங்கள் மூடப்பட்டன. நாம் அனைவரும் நெருக்கடிகளுடனேயே வாழ்ந்தோம்.

நாம் தற்போது மீண்டும் அபிவிருத்தி கண்டு வருகின்றோம். விவசாய செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளோம். சுற்றுலாத்துறை அபிவிருத்து அடைகிறது. சுற்றுலாத்துறைக்குள் பல்வேறு தொழில் வாய்ப்புக்கள் உருவாகின்றன. அதனால் அனைவரும் ஒன்றுபட்டு அந்த துறையை பலப்படுத்த வேண்டும்.

நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் போதிய வாழ்வாதாரத்தை பெற்றுக்கொடுக்க

(7ஆம் பக்கம் பார்க்க...)

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்



# RUHBINS HOSPITAL (PVT) LTD.

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

## NOVEMBER 14

# WORLD DIABETES DAY

# DIABETES IS A SILENT KILLER

| Approximately 463 M + From the World Population | Over 2 M Sri Lankans are Diabetes | Every 6 seconds One person dies due to Diabetes |
|---|---|---|



## Access to Diabetes Care

### WELLNESS PACKAGE

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

**Special Offer**

**Rs. 5,500/-**

Offer valid till Dec 14th

Hotline: +94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகொள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.


Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

## வடமராட்சி கிழக்கில் மண்ணுக்குள் புதைக்கப்பட்டிருந்த

# 34 கிலோ கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்





**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு – வத்திராயன் பகுதியில் 34 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் தாளையடியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினர் மற்றும் பொலிஸாரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கையின் மூலம் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட 3 பிளாஸ்டிக் பரல்களில் அடைக்கப்பட்டிருந்த 17 பொதிகளில் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள கேரள கஞ்சா சுமார் 34 கிலோ 400 கிராம் எடை கொண்டது எனவும், மொத்த மதிப்பு ஒரு கோடி முப்பது இலட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதே போல மாவீரர் தினத்தில் ஓடி ஓடி விளக்கேற்றி, அஞ்சலிக்கும் சிவாஜிலிங்கத்தையும் காலை நிகழ்வுகளுக்குப் பின்னர் மாலை நிகழ்வுகளில் அதிகம் காண முடியவில்லை.

மூக்கில் வியர்க்க, விடயம் என்னவாக இருக்கும் என்று தேடினேன்.

மாவீரர் தின நிகழ்வுகள் முடிந்ததோ இல்லையோ, அந்தந்த இடங்களில் இருந்து சத்தம் சந்தடியின்றி பயணம் செய்து, கட்டுநாயக்க வந்து, நேற்று விடியும் வேளை இவர்கள் இருவர் உட்பட சிலர் புதுடெல்லிக்குப் பறந்தார்கள் என்ற தகவல் தெரிய வந்தது.

இலங்கையிலிருந்து ஸ்ரீதரன் எம்.பி., நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி., முன்னாள் எம்.பிக்களான சிவாஜிலிங்கம், ஞானமுத்து சிறிநேசன் மற்றும் சிவில் சமூக உறுப்பினர் துரைசாமி தவசலிங்கம், சிவ பாலகணேசன் ஜெயகரன் என்று ஒரு குழுவினர் புதுடெல்லியில் ஒரு கூட்டத்துக்குப் புறப்பட்டு போயிருக்கின்றனர் எனத் தெரியவந்தது.

ஆஸ்திரேலியா தமிழ் காங்கிரஸ் (ATC), தமிழ் அமெரிக்க ஐக்கிய அரசியல் நடவடிக்கைக் கமிட்டி (Tamil Americans United Political Action Committee), இந்துப் போராட்டக் குழு (Hindu Struggle Committee), அமெரிக்கத் தமிழ் நடவடிக்கை குழு (United States Tamil Action Group) ஆகியன சில இந்திய இந்து அமைப்புகளுடன் சேர்ந்து நடத்தும் முக்கிய கலந்துரையாடல் கூட்டங்களில் பங்கு பற்றவே இவர்கள் புதுடெல்லிக்குப் பறந்திருக்கின்றனர்.

பல்வேறு கண்டங்களையும் சேர்ந்த புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் இலங்கையின் பிரதிநிதிகள் 29ஆம் திகதி (இன்று) முதல் டிசம்பர் 2ஆம் திகதி வரை புதுடில்லியில் கூடி ஆராயவிருக்கின்றனர் என்றும் –

இலங்கையில் வாழும் தமிழ் சமூகத்தின் பரிதாபகரமான நிலைமைகளை முன்னிலைப்படுத்தி, கொள்கை உருவாக்கம் மற்றும் பிரசார நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடுவர் என்றும் – தெரிவிக்கப்பட்டது.

இன்று பிற்பகல் 1:30 மணி முதல் 3 மணி வரை டெல்லியில் 'பிரஸ் கிளப் ஒவ் இந்தியா'வில் இத்தரப்பினர் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தவுள்ளனர் என்றும் தெரியவந்தது.

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸின் தலைவர் கிருஷ்ணபிள்ளை இளங்கோ, தமிழ் அமெரிக்க ஐக்கிய அரசியல் நடவடிக்கைக் குழுவின் செயலாளரும், அமெரிக்க உலகத் தமிழ் அமைப்பின் உறுப்பினருமான தாமோதரம்பிள்ளை சிவராஜ், அமெரிக்கத் தமிழர் இயக்கக் குழுவின் செயலாளர் சுந்தர் குப்புசாமி, இந்தியாவைச் சேர்ந்த உலக சமூக சேவை மைய அறங்காவலர் ஆர்.சி. கதிரவன் உட்படப் பலர் இந்த கலந்துரையாடல்களில் பங்குபற்றுவர் என்றும் கூறப்பட்டது.

எனினும் இந்திய மத்திய அரசில் பலம் பொருந்திய சில இந்து அமைப்புகளின் பின்னணி இந்த நடவடிக்கையில் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. விரைவில் விடயம் மலிந்து சந்தைக்கு வரும். அப்போது மேல் விவரங்களை விவரமாகப் பார்ப்போம்... நண்பர்களே..!

## அடுத்த ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஏதேனும் சர்வதேச அமைப்பொன்றில் முக்கிய பதவியொன்றைப் பெற்று ஓய்வுகாலத்தைக் கழிக்கவே ரணில் விக்கிரமசிங்க முற்படுவார். அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார்.

கோட்டாபய ராஜபக்ஷ என்னையும், உதய கம்மன்பிலவையும் அமைச்சரவையில் இருந்து நீக்கினார். அப்போது கோட்டா ஆட்சியின் இறுதிக் காலம் ஆரம்பமானது. ரணில் விக்கிரமசிங்க, ரொஷான் ரணசிங்கவை அமைச்சரவையில் இருந்து நீக்கியுள்ளார். எனவே, இந்த அரசின் இறுதிப் பயணமும் ஆரம்பமாகியுள்ளது." – என்றார்.

## அலெக்ஸ் சித்திரவதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெ.மேனன் தலைமையிலான குழுவினர் நேற்று சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது உயிரிழந்த இளைஞருடன் உடனிருந்த மூன்றாவது சாட்சியான மற்றைய இளைஞர், பொலிஸ் நிலையத்துக்குள் தம்மைச் சித்திரவதைக்குட்படுத்திய இடங்களைக் காண்பித்தார்.

இவற்றைப் பார்வையிட்டு யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளான நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## ரணிலின் சூழ்ச்சி வெற்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபைத் தேர்தலை நடத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சுக்கான செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

"நாட்டின் அரச இயந்திரத்தில் அரச சேவையாளர்கள் முக்கியமானவர்களாக உள்ளார்கள். தற்போதைய நிலையில் அரச சேவையாளர்களால் வாழ முடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த ஆண்டை காட்டிலும் தற்போது வாழ்க்கை செலவுகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. ஆனால், வருமானம் ஒரு சதத்தில் கூட உயர்வடையவில்லை.

வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம் என்று அரசு குறிப்பிடுகின்றது. ஆனால், நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒரு மாதத்துக்கு 74 ஆயிரம் ரூபாவை செலவிட வேண்டியுள்ளது எனப் புள்ளிவிபரவியல் திணைக்களம் குறிப்பிடுகின்றது. 75 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் எத்தனை அரச சேவையாளர்கள் உள்ளனர்?

ஒரு பட்டதாரி அரச சேவையாளரின் அடிப்படைச் சம்பளம் 31 ஆயிரம் ரூபாவாக உள்ளது. அரசின் புதிய வரி விதிப்பு அரச சேவையாளர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களுக்களும் பாதிக்கப்படுவார்கள்.

அரச சேவையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்க ஒரு மாதத்துக்கு 133 பில்லியன் ரூபாவை செலவழித்து விட்டு, அரச சேவையாளர்கள் உட்பட ஒட்டுமொத்த சேவை தரப்பினரிடமிருந்து மாதாந்தம் 1094 பில்லியன் ரூபாவை வரி வருமானம் ஊடாகப் பெற அரசு தீர்மானித்துள்ளது.

நான்கு பேர் உள்ள குடும்பத்துக்கு 74 ஆயிரம் ரூபா ஒரு மாதத்துக்கு தேவை என்று குறிப்பிடுகின்ற நிலையில் 10 ஆயிரம் ரூபா குறைந்தபட்ச கொடுப்பனவு ஒருபோதும் சாதகமாக அமையாது என்பதால் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அரச சேவையாளர்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றார்கள். இந்தக் கோரிக்கைக்கு அரசு கவனம் செலுத்தவில்லை.

பெருந்தோட்ட மக்கள் பாரிய போராட்டத்துக்கு மத்தியில் ஆயிரம் ரூபா ஒரு நாள் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால், இன்று 1000 ரூபா ஒரு நாள் செலவுகளுக்குப் போதுமா? குறைந்தபட்சம் 2 ஆயிரத்து 500 ரூபா நாள் சம்பளத்தைப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

அரச சேவைகளுக்கான ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆட்சேர்ப்புக்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு முழுமையாக ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. இந்தத் தீர்மானத்தை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2016 ஆம் ஆண்டு எடுத்தார். இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் தான் இன்று 14 இலட்சத்துக்கும் அதிகமானோர் அரச சேவையில் ஈடுபடுகின்றார்கள்.

கிராம சேவகர் சேவையில் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு புதிய ஆட்சேர்ப்புக்கான பரீட்சை இடம்பெற்றது. பெறுபேறுகளும் வெளியாகியுள்ளன. ஆனால், இன்று வரை நியமனங்கள் வழங்கப்படவில்லை. கிராம சேவகர் அலுவலகங்களுக்கு மாதாந்தம் வாடகையாக 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படுகின்றது. தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில் 2 ஆயிரத்து 500 ரூபா எந்தளவுக்குப் போதுமானது? கிராம சேவகர் சேவையில் பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்.

1997ஆம் ஆண்டு சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு பிரச்சினைகளுக்கான தீர்வு எட்டப்படவில்லை. ஓய்வூதியக் கொடுப்பனவு பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பல அரச சேவையாளர்கள் உயிரிழந்துள்ளார்கள். ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளரின் பெயரும் ஓய்வூதியக் கொடுப்பனவு பிரச்சினைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளில் பிரதேச சபைகளில் மொழிப் பிரச்சினை காணப்படுகின்றது. தமிழ் மொழி பேசுபவர்கள் பிரதேச சபைகளில் இல்லாத காரணத்

(7ஆம் பக்கம் பார்க்க...)

# வவுனியா நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் உடனேயே மரணம்!

வெளிநாட்டுக்கு ஆள்களை அனுப்புதல் தொடர்பான கொடுங்கல் வாங்கல் சம்பந்தமாக வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவர் சற்று நேரத்திலேயே மரணமடைந்துள்ளார்.

வவுனியா நீதிமன்றத்தால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் நெஞ்சுவலி எனக் கூறி நீதிமன்றத்தில் இருந்து நேரடியாக வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்ட போதும், வைத்தியசாலைக்கு சேர்க்கப்படுவதற்கு முன்னரே அவர் மரணமடைந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடு செல்வதற்கு சிலர் எத நபர் ஊடாக பிறிதொருவருக்கு பணம் கொடுத்துள்ளனர். பணம் பெற்றுக் கொண்டவர் பணம் வழங்கியவர்களை வெளிநாடு அனுப்பாமையால், இந்த நபருக்கு எதிராக பணம் கொடுத்தவர்கள் வவுனியா பொலிஸில் பணம் கொடுத்தமை தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து இந்த நபரைக் கைது செய்த பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தி விளக்கமறியலில் வைத்திருந்தனர். பின்னர் நேற்று நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையிலேயேஅவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த நபரே மரணமடைந்தவராவார்.

## சந்தேகநபரைத் துரத்திச் சென்ற

# பொலிஸ் உத்தியோகத்தர் துப்பாக்கிச்சூட்டில் காயம்

பொலிஸ் சுற்றுவளைப்பின் போது தப்பிச் செல்ல முயன்ற சந்தேகநபரைத் துரத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார் என்று தனமல்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர் தனமல்வில பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார்.

சம்பவத்தின் போது தனமல்வில பிரதேசத்தில் குறித்த சந்தேகநபரிடம் பொலிஸார் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த சந்தேகநபர் பொலிஸாரிடம் இருந்து தப்பிச் செல்ல முயன்று காணிக்குள் ஓடிய போது அவரைப் பின்தொடர்ந்து வந்த பொலிஸ் உத்தியோகத்தர், சக பொலிஸார் சந்தேகநபரை நோக்கி மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் தவறுதலாகச் சிக்கிப் படுகாயமடைந்துள்ளார்.

அவர் தனமல்வில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலின் சூழ்ச்சி வெற்றி....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

தால் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அம்பகமுவ, நுவரெலியா பிரதேச சபைகளில் இந்தப் பிரச்சினை காணப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் நடக்கும் என்று ஜனாதிபதி குறிப்பிட வேண்டிய தேவையில்லை.

பொதுத்தேர்தலைப் பிற்போடுவதற்கு ஜே.ஆர்.ஜயவர்தன எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. அரசமைப்பால் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அடுத்த ஆண்டு தேர்தல்களைநிச்சயம்நடத்தவேண்டும்.அப்போது தான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும்." – என்றார்.

## நாடு எதிர்நோக்கும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி..)

வேண்டும். அனைவரும் ஒற்றுமையாக பொறுமையுடன் பயணிக்க வேண்டும். சரிவடைந்த இடத்திலிருந்து முன்னேறி வந்துள்ளோம். இருப்பினும் பயணம் இன்னும் முடியவில்லை. அடுத்த ஜனவரி மாதத்திலிருந்து மேலும் சில வருடங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி நாம் செயற்பட வேண்டியிருக்கும்.

அன்று நமது நாடு நடுத்தர வருமானம் பெற்றது. இன்று குறைந்த வருமானம் பெரும் நாடாக மாறியுள்ளோம். மீண்டும் நடுத்தர வருமானம் ஈட்டும் நாடாக மாறுவ



தற்கே முயற்சிக்கிறோம். அதன் பின்னர் உயர் வருமானம் ஈட்டும் நாடாக மாற வேண்டும். 2048 வரையில் அதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எமது நாட்டின் கல்வியிலும் பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. அதனால் பலரும் உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். தொழில் கல்விக்கு பாரிய கேள்வி காணப்படுகிறது. இருப்பினும் அதனை பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்பு இல்லை. அதனாலேயே கல்வித்துறையை மறுசீரமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

மேலும் 2030 களில் ஆங்கில மொழியை பாடசாலைக் கல்வி மற்றும் உயர்கல்வியில் உள்வாங்குவதற்கான வேலைத்திட்டத்தை செயற்படுத்துவோம். பின்னர் தொழில் கல்விக்கான முழுமையான மறுசீரமைப்பை இவ்வருடத்தில் ஆரம்பிக்கவுள்ளோம்.

அத்தோடு விவசாய நவீன மயப்படுத்த வேலைத்திட்டத்தில் பங்களிப்புச் செய்ய சனச போன்ற நிறுவனங்களுக்கு பெரும் வாய்ப்புள்ளது. அதனோடு ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன்." – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தத்துவம் உரைக்கும் ரணில்

தமது கடந்த 16 மாத நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க என்ன சாதித்தார் என்று தேடிப் பார்த்தால், பல விடயங்களிலும் அவர் வெறும் கையால் முழம் போடுவது போல வாய்ச்சவடால் பேச்சு மட்டுமே பேசினார் என்பதுதான் மிஞ்சும்.

வாய்க்கும் மூளைக்கும் தொடர்பில்லாதவர் மாதிரிப் பேசுகின்றாரோ என்று பல சமயங்களில் பலரையும் எண்ண வைக்கும் அவரது பேச்சுக்கள்.

"இலங்கையில் போரில் உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் நினைவேந்துவதற்கு முழுமையான உரிமை உண்டு. இந்த விடயத்தில் பாரபட்சம் காட்டக்கூடாது. நினைவேந்தல் உரிமையை எவரும் தட்டிப் பறிக்கக் கூடாது" - என்று இரண்டொரு நாள்களுக்கு முன்னரும் அவர் திருவாய் மலர்ந்து அருளியிருக்கின்றார்.

அதுவும் சிங்கள ஊடகம் ஒன்றின் சிரேஷ்ட ஊடகவியலாளருக்கு வழங்கிய செவ்வியிலேயே அதை அவர் வலியுறுத்திக் கூறி இருக்கின்றார்.

அவரது அந்தச் செய்தி - கொள்கை விளக்க நிலைப்பாடு - வெளியான அதே சமயத்தில் தான் அவரின் கீழ் இயங்கும் சிங்களப் பொலிஸ், மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் புகுந்து, நினைவேந்தலைக் குழப்பி, பெரும் அடாவடித்தனத்தை - அட்டகாசத்தை - அராஜகத்தை - ஆர்ப்பாட்டமாகப் புரிந்திருக்கிறது.

இது தொடர்பில் வெளிப்படையாகத் தமது அதிகார ஆளுமையை வெளிப்படுத்தக்கூடிய விதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய நடவடிக்கை ஏதும் எடுக்க மாட்டார் என்று உறுதியாகக் கூறலாம். ஏனென்றால் பல சமயங்களில் அவரின் கருத்தை வெளியிடும் வாய்க்கும் அவரின் மூளைக்கும் தொடர்பு இருப்பதில்லை என்று பலரும் சந்தேகிக்கும் அதே விடயம்தான் காரணம்.

தமிழர் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இரா. சாணக்கியன் போன்றோர் முன்னிலையில்தான் இந்த பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப்போக்கு நடவடிக்கை பொலிஸாரால் கட்டவிழ்க்கப்பட்டது. அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரையும் அகௌரவப்படுத்தும் விதத்தில்தான் சிங்களப் பொலிஸின் அதிகார மிடுக்கு அங்கு வெளிப்படுத்தப்பட்டது.

நினைவேந்தல் உரிமையை யாரும் மறுக்கக்கூடாது என்று பெரும் கௌதம புத்தர் போல நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தத்துவம் போதிக்கின்றார். அதே சமயம் அவரின் கீழ் இயங்கும் பொலிஸ் துறையின் மூத்த அதிகாரிகளோ நேரில் சென்று நினைவேந்தலை அடாவடித்தனம் பண்ணிக் குழப்புகின்றனர். அதை நேரடியாகப் பார்த்து, அனுபவித்து, அகௌரவப்படுத்தப்பட்ட நமது தமிழ்ப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு வந்து எப்படி உரையாற்றுவர்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மேற்படி இரண்டு தமிழ் எம்.பிக்களும் - சாணக்கியனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் - நாடாளுமன்றத்தில் அவ்வப்போது உரித்துத் தொங்க விடுவது வழமை.

தமது சொல்லுக்கு - கொள்கை நிலைப்பாட்டுக்கு - மாறாகவும், சட்ட விரோத முறையிலும் நினைவேந்தல் நிகழ்வுகளில் அராஜகம்புரிந்த பொலிஸாரைக்கண்டித்து நடவடிக்கை எடுக்க திராணியற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் எம். பிக்கள் - குறிப்பாக இந்த இரண்டு எம்.பிக்களும் - நாடாளுமன்றத்தில் அவ்வப்போது மோசமாகத் திட்டித் தீர்த்துக் கரித்துக் கொட்டுவதில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

உரிய நடவடிக்கையை, உரிய சமயத்தில் எடுக்காமல், வெறும் தத்துவ உபதேசம் செய்பவரைப் பார்க்க பெரும் வேடிக்கையாகத்தான் இருக்கின்றது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்."

- தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)



## புத்தளத்தில் குளத்தில்...

(முதலாம் பக்ககத் தொடர்ச்சி...)

நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளத்தில் வலையைக் கட்டி மீன் பிடிக்கும் தொழிலை இடைக்கிடையே மேற்கொண்டு வரும் அந்த மீனவர், நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு வீட்டிலிருந்து வெளியே சென்ற நிலையில் நேற்றிரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மஹகும்புக்கடவல – மோகரிய குளத்தில் சடலமொன்று மிதப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அங்கு முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் சம்பவ இடத்தில் மரண விசாரணையை மேற்கொண்டார்.

அத்துடன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட நபரின் முகப் பகுதி சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது எனவும், கபரகொயா எனும் நீர் உடும்பு குறித்த மீனவரின் முகப் பகுதியைச் சாப்பிட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது எனவும் புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி கூறினார்.

எவ்வாறாயினும், பிரேத பரிசோதனைக்குப் பின்னரே அந்த நபர் உயிரிழந்தமைக்கான காரணத்தை அறியமுடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மஹகும்புக்கடவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இஸ்ரேல் – ஹமாஸ் மோதல் தவிர்ப்பு நீடிப்பதால் மேலும் சுமுக நிலை வரும்



**இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பு ஆகிய இரண்டும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்த நிலையில் ஹமாஸால் கடத்தப்பட்ட 240 பேரில் பெண்கள் மற்றும் குழந்தைகள் என 50 பேர் 4 நாள்களில் அடுத்தடுத்து விடுவிக்கப்படுவார்கள் என்றும் இதனால், இருதரப்பு மோதலும் மேலும் 4 நாள்களுக்கு நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.**

எகிப்து, அமெரிக்கா மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் மேற்கொண்ட மத்தியஸ்த முயற்சியின் பலனாக, முதலில் 13 பேரும், பின்னர் 17 பேரும் என ஹமாஸ் அமைப்பு பிடித்து வைத்திருந்த பணய கைதிகள் அடுத்தடுத்து விடுவிக்கப்பட்டனர். 4பாவது நாளில் 11 பேரை ஹமாஸ் அமைப்பு விடுவித்தது.

இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் நேற்று முன் தினத்துடன் முடிவுக்கு வந்த நிலையில், கத்தார் நாட்டின் மத்தியஸ்த பேச்சுவார்த்தையின் பலனாக, கூடுதலாக 2 நாள்களுக்கு போர்நிறுத்த ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டது. இதனால், பணய கைதிகள் விடுவிப்புக்கான சாத்தியமும் தொடரும் என எதிர்பார்க்கப்பட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தம் 2 நாள்களுக்கு நீட்டிக்கப்பட்ட சூழலில், நேற்று விடுவிக்கப்படவிருந்த இஸ்ரேல் பணய கைதிகளின் பட்டியல் ஒன்று இஸ்ரேல் நாட்டு பிரதமர் நெதன்யாகுவின் அலுவலகத்திற்கு வந்தடைந்து உள்ளது. இதனை "தி டைம்ஸ் ஒவ் இஸ்ரேல்" தெரிவித்துள்ளது.

இதுவரை 69 பணய கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவித்து உள்ளது. கடந்த 3 நாள்களில் இஸ்ரேல் மற்றும் இஸ்ரேல் அல்லாதவர்கள் என 69 பணய கைதிகள் விடுவிக்கப்பட்டு உள்ளனர். இதற்கு ஈடாக, 150 பாலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுவித்து உள்ளது.

இதேபோன்று, அமெரிக்க வெளியுறவு மந்திரி பிளிங்கனின் இஸ்ரேல் மற்றும் மேற்கு கரைக்கான பயணத்தின் போது, காசாவில் ஹமாஸ் பிடித்து வைத்துள்ள மீதமுள்ளவர்களை பாதுகாப்பாக மீட்பதற்காக நடந்து வரும் முயற்சிகள் பற்றி ஆலோசிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பாலஸ்தீனியர்களுக்கான மனிதநேய உதவி மற்றும் மக்களை பாதுகாப்பதுடன், தன்னை பாதுகாத்து கொள்ளும் இஸ்ரேலின் உரிமை ஆகியவை பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்பட உள்ளது

# வடகொரியர்களுக்கு முடி உதிர்ந்து விரைவில் மொட்டை விழுகிறதாம்!

## சோப்புகளில் அதிக அளவு ரசாயனங்கள் காரணம்



பியோங்யாங், நவ.29

வடகொரியாவின் டாப் தலைவர் கிம் ஜாங் உன், தனது வாழ்க்கை முறையால் அடிக்கடி செய்திகளில் இடம்பிடிப்பவர். இப்போது கிம் ஜாங் உன்னுக்கு பதிலாக வடகொரியா மக்கள் வேறு விவாதத்திற்கு வந்துள்ளனர். அங்குள்ள மக்கள் தற்போது ஒரு பெரும் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். அதுதான் முடி உதிர்தல் ஆகும். வடகொரிய மக்களின் தலைமுடி வேகமாக உதிர்கிறதாம். அதனால் அவர்களின் தலை சீக்கிரமே வழுக்கையாகிவிடும் என்ற அபாயம் உள்ளது.

நியூயார்க் போஸ்ட் அறிக்கையின்படி, முடி உதிர்தல் தொற்றுநோய் வட கொரியாவில் வேகமாக பரவுகிறது என்று தென் கொரிய நிபுணர்கள் கூறுகின்றனர். அதற்கு காரணம் வட கொரியாவில் பயன்படுத்தப்படும் சோப்பு மற்றும் சலவை சோப்புகள் என்று நிபுணர்கள் குற்றம் சாட்டினர்.

வடகொரியர்கள் பயன்படுத்தும் சோப்பு மற்றும் சலவை சோப்புகளில் அதிக அளவு ரசாயனங்கள் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் விரைவான முடி உதிர்வு ஏற்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் வடகொரியாவில் இராணுவம் தொடர்பாக கடுமையான விதிமுறை உள்ளது. அனைத்து உடல் திறன் கொண்ட ஆண்களும் பொதுவாக ஆயுதப்படையில் 10 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும். பெரும்பாலான ஆண்கள் இராணுவத்தில் பணிபுரிந்து வருவதால், அவர்களுக்கு தலைமுடி உதிர்வு பிரச்சினை அதிகமாக உள்ளது. தற்போது வடகொரியாவில் மட்டுமின்றி தென்கொரியாவிலும் திடீரென முடி உதிர்வது அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.



# தேயிலை பயிர் செய்கையுடன் இணைந்து கோப்பிச் செய்கை

**மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)**

எதிர்வரும் வருடத்திற்குள் 400 ஹெக்டேயர் கோப்பியை பயிரிட விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, இதற்காக வரவு – செலவுத் திட்ட ஆவணத்தில் நாற்பது கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது பிரதான தோட்டப் பயிராக கோப்பி பயிர்ச்செய்கை மேற்கொள் ளப்படாவிட்டாலும், வெளிநாட்டு சந்தையில் கோப்பிக்கான அதிக தேவையை கருத்திற்கொண்டு மீண்டும் கோப்பி செய்கையை தோட்டப் பயிராகப் பிரபலப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனால் ஒரு ஹெக்டேருக்கு 10 லட்சம் ரூபா கோப்பி பயிர்ச்செய்கைக் காக வழங்கப்படும் எனவும், அதில் 50 வீதமான தொகை மீளப்பெறப்பட மாட்டாது எனவும் அமைச்சு தெரிவித் துள்ளது.

வரவு – செலவுத் திட்டம் ஊடாக 2024ஆம் ஆண்டுக்கான விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு 9,600 கோடி ரூபா ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அரேபிகா கோப்பி, ரோபஸ்டா கோப்பி, லைபெரிகா கோப்பி ஆகியவை இந்த நாட்டில் வளர்க்கப்படுகின்றன.

இவற்றில் அரேபிகா கோப்பி, மிகவும் பிரபலமான கோப்பி ரகமாகும். மேலும் அந்த கோப்பி சாகுபடிக்கு முன்னு ரிமை அளிக்குமாறு ஏற்றுமதி வேளாண் துறைக்கு அமைச்சர் அறிவுறுத்தி யுள்ளார்.

# எல்லை மீறிய உயர் கட்டடத்தால் சாவகச்சேரியில் நேர்ந்த மரணம்!

## உயர் அழுத்த மின் வயரை நெருங்கியமையால் விபரீதம்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், நவ.29

சாவகச்சேரியில் அனுமதிக்கப்பட்ட அளவை விட கட்டடத்தின் உயரம் அதிகரித்து, உயர் அழுத்த மின்சார வயரின் அண்மை வரையில் கட்டடம் சென்றமையே நேற்றைய மின்சாரத் தாக்கத்திற்கு காரணம் எனக் கண் டறியப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் இயங்கும் நிதி நிறுவனம் ஒன்றின் நீர்த் தொட்டியில் ஏறிய ஊழியர் ஒருவர் உயர் மின் அழுத்த மின்சார வயரின் தாக்கத் திற்கு இலக்காகி உயிரிழந்திருந்தார்.

இது தொடர்பில் இடம்பெற்ற மரண விசாரணையின்போதே மேற்படி தகவல் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக கட்டட உரிமையாளர உள்ளூராட்சி சபையில் அனுமதி பெற்ற அளவுக்கு மேலதிக மாகக் கட்டட அமைப்பை ஏறபடுத் தியமையினால் கட்டட உயரம் அதிக ரித்து, வீதியால் செல்லும் மின்சார வயரை அண்மித்துள்ளது. இதன் காரணமாகவே இந்த மின்சாரத் தாக் கம் ஏறபட்டுள்ளதாக கண்டறியப் பட்டுள்ளது.

உயர் மின் அழுத்த வயர்கள் செல்லும் பகுதிகளில் எந்தத் திசையி லும் 2 மீற்றருக்குள் எந்தவொரு இரும் பினைக் கொண்டு அமைக்கும் கட்டு மானமும் செல்லக்கூடாது என இலங்கை மின்சார சபை தெரியப்படுத்துகின்ற மையும் குறிப்பிடத்தக்கது.





# 36 வயதுடைய முன்னாள் படை வீரர் வீதி ஓரத்தில் நேற்று சடலமாக மீட்பு

## மதுரங்குளி ஜோசப்வத்தையில் சம்பவம்

(ரஸீன் ரஸ்மின்)

மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜோசப்வத்தை பிரதேசத்திலுள்ள வீதியோரத்தில் முன்னாள் விமானப் படை வீரர் ஒருவர் சடலமாக நேற்றுக் காணப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 36 வயது மதிக்கதக்க நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை விமானப் படையில் விமானப் படை வீரராக பணிபுரிந்த நிலையில், அதிலிருந்து பின்னர் விலகியுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

மதுரங்குளி பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், மதுரங்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு சம்பவ இடத்திற்கு சென்று முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டது.

புத்தளம் பிராந்திய பொலிஸ் தடயவியல் பிரிவினரும் சம்பவ இடத்தில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மேலும், பொலிஸ் மோப்ப நாய் சம்பவ இடத்திற்கு அழைத்து வரப்பட்டது. அங்கு பொலிஸாரினால் தேடுதல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இது ஒரு கொலையாக இருக்கலாம் என தாம் சந்தேகிக்கின்றனர் எனத் தெரிவித்த பொலிஸார், பல கோணங்களில் விசாரணைகளை நடத்துகின்றனர். முறைப்பாடுகளையும் பதிவு செய்து வருகின்றனர்.

மேலும், பிரேத பரிசோதனையின் பின்னர் இது கொலையா அல்லது இயற்கை மரணமா என்பது பற்றி அறிய முடியும் எனவும் பொலிஸார் கூறினர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த புத்தளம் மாவட்ட பதில் நீதிவான், அங்கு நீதிவான் விசாரணையை நடத்தினார். பிரேத பரிசோதனைக்காக சடலத்தை புத்தளம் தள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் மேற்கொண்டு வருகின்றனர்.




# சிவனொளிபாதமலைக்கு பயணிகள் வந்து திரும்ப பின்னால் காட்டுப் பன்றிக் கூட்டமும் படையெடுப்பு

## நல்லதண்ணி நகரில் இந்த நிலைமை

(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)

சிவனொளிபாத மலைப் புனிதப் பயணத்துக்கு இன்னும் ஒரு மாதம் காலம் உள்ள போதிலும், சிவனொளி பாத மலைக்குத் தரிசனம் செய்ய உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சுமார் 2000க்கும் மேற்பட்டவர்கள் கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி நாளில் வருகை தந்தனர் என நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அவ்வாறு வந்த யாத்திரிகர்கள் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் 25 ஆம் திகதி இரவு வேளையில் மலை உச்சிக்கு சென்று மறு நாள் காலையில் சூரிய உதயம் பார்த்து விட்டு அங்கு உள்ள சிவனின் பாதத்தை வணங்கி விட்டுத் திரும்பிச் சென்று உள்ளனர்.

அவ்வாறு வந்த யாத்திரிகர்கள் நல்லதண்ணி நகரில் பல இடங்களில் தாங்கள் கொண்டு வந்த உணவு பொதிகளை உண்ட பின் எஞ்சிய வற்றை பல வேறு இடங்களில் போட்டு விட்டுச் சென்றமையால் அந்த உணவுகளைச் சாப்பிடக் காட்டுப் பன்றிகள் கூட்டம் கூட்டமாக படை எடுத்துள்ளன. நல்லதண்ணி நகரில் அக்கூட்டங்களின் நடமாட்டத்தைக் காணக் கூடியதாக இருந்தது.

இதனால் அப்பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் தாம் பீதியில் நடமாட வேண்டியுள்ளது எனத் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி இப்பகுதியில் நடமாடும் பன்றிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த நாடாளுமன்றில் சித்தார்த்தன் வலியுறுத்து

இரண்டு பிரதான கட்சிகளுமே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றுதான் நாடாளுமன்றில் சொல்கிறார்கள். அதை இனியும் தாமதமின்றி நடத்துங்கள்.

– யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்று நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றிய போது இவ்வாறு வலியுறுத்தினார். அவரின் உரையின் முழு விவரமும் வருமாறு:–

பிரதமரின் பேச்சின்படி, மாகாண சபைத் தேர்தல் விடயமாக இரண்டு பிரதான கட்சிகளுமே அந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றுதான் நாடாளுமன்றில் சொல்கிறார்கள்.


தேர்தல் நடத்துவதில் உள்ள பிரச்சினைகள் சம்பந்தமாகப் பேசப்படுகின்றது. இது தொடர்பில் பழைய முறையிலே சென்று தேர்தலை நடத்த முடியும் என்று எங்களுடைய உறுப்பினர் சுமந்திரன் ஒரு தனி நபர் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார்.

இந்த இரண்டு கட்சிகளையும் பொறுத்த மட்டில் இந்த மாகாண சபை என்பது ஓர் அதிகாரப் போட்டிக்கான விடயமாக அது இருக்கிறதே ஒழிய, வேறில்லச்சி. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் இது ஒரு முக்கியமான விடயமாகும். ஆகக் குறைந்தது சிறிதளவாவது நாங்கள் எங்களுடைய பகுதிகளில் இருக்கக்கூடிய விடயங்களை நாங்களே கையாள்வதற்கான ஒரு சபையாக பார்க்கின்றோம்.

இந்த மாகாண சபை ஒரு முழுமையான தீர்வாக இருக்க முடியாமல் விட்டாலும் நிச்சயமாக அதனை நாங்கள் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் பல தடவைகள் கேட்டுக் கொண்டிருக்கின்றோம் . இப்போது பிரதமர் அவர்களும் எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களும் இதனை நடத்தத்தான் வேண்டும் என்று ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆகவே நாங்கள் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று விநயமாகக் கேட்கின்றோம்.

பிரதமர் நான்கு மிக முக்கிய அமைச்சுகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றார். மிக முக்கிய அமைச்சுக்கள் நாட்டின் முழுமையான நிர்வாகத்துக்கு பொறுப்பாக இருக்கின்றன. பிரதமரைப் பொறுத்த மட்டில் அவர் நீண்ட காலம் – அதாவது நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக – நாடாளுமன்ற அங்கத்தவராக இருந்திருக்கிறார். பல தடவைகள் அமைச்சராக இருந்திருக்கிறார். பல தடவைகள் அவர் அமைச்சராக இருந்த காலங்களில் எல்லாம் பல பிரச்சினைகளை கொண்டு செல்லுகின்ற போது அவர் அதனை கரிசனையாக கேட்டு முழுமையாக நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றார்.

அவரைப் பொறுத்த மட்டில் இந்த




விஷயங்களிலே மிகக் கவனமாக, நேர்மையாக, யார் என்றாலும், எதிர்க்கட்சியில் இருந்தாலும், அதனைக் கொண்டு வந்தால் அதனை தீர்ப்பதில் மிக அக்கறையாக செயல்பட்டிருக்கிறார். எங்களுடைய பிரச்சினையிலும் நான் நேரடியாக எடுத்துச் சொன்ன பிரச்சினைகளை அவர் தீர்த்திருக்கிறார். நான் கட்டாயமாக அவருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சுன்னாகத்தில் ஒரு தபால் கந்தோர் கட்டவேண்டும் என்ற மக்களினுடைய ஆர்வம் மிக நீண்டகாலமாக இருந்தது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்திலே கௌரவ மனோ கணேசன் அதற்கான நிதியை ஒதுக்கி அதற்கான அடிக்கல் 2019 ஆம் ஆண்டு நாட்டினார். அப்போது அரச அதிபராக இருந்த வேதநாயகம் அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு அந்த ஒப்பந்தக்காரரிடம் 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முடிவுற வேண்டும் என்று சொல்லி அந்தக் கட்டடத்தை முடிக்க கேட்டிருந்தார்.

ஆனால் அந்த கட்டடம் முடிவு பெறவில்லை. ஆனால் அது முடிவுற்றதாக அதற்கான சான்றிதழ் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு அந்த கட்டடம் அப்படியே இருந்தது. வேலைகள் நடைபெறவில்லை. நான் இந்த நாடாளுமன்றத்தில் அந்தப் பிரச்சினையை எடுத்த போது பிரதமர் அதனை முடித்துத் தருவதாக உறுதி கூறினார். இப்போது அந்த கட்டட வேலை ஏறக்குறைய முடிந்து விட்டது. இன்னுமொரு சிறு அழகுபடுத்தும் வேலைகள் நடக்கின்றன. அதன் பிறகு அது திறக்கப்படும். அதற்கு எங்களுடைய சுன்னாகம் பகுதி மக்கள் சார்பாக நான் பிரதமருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

எப்படி மனோகணேசன் அதனை ஆரம்பித்தாரோ அதே போல எங்களுடைய பிரதமர் அவர்கள் அதை முடித்து வைத்திருக்கின்றார். இருவருக்குமே நான் நன்றி கூற வேண்டும்.

அதே போல உள்ளூராட்சி சபை தேர்தல்கள் நடைபெறாமல் 8 மாதங்களுக்கு மேலாக இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பணமில்லை என்ற காரணம் கூறப்பட்டிருக்கின்றது. அது வேற விஷயம். ஆனால் அந்த உள்ளூராட்சி சபையிலே வேட்பு மனு தாக்கல் செய்த பலர் அரச உத்தியோகத்தர்களாக இருக்கின்றார்கள். அதிகமானோர் வேலைக்கு போய்விட்டார்கள்.

ஆனால் பலருக்கு இன்னும் அவர்களினுடைய படிகள் கொடுக்கப்படவில்லை. நான் வேண்டுமென்றால் அவர்களினுடைய விவரங்களைத் தர முடியும்.

தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்த அரச ஊழியர்கள் அனைவருக்கும் அவர்களினுடைய படிகள் கிடைப்பதற்கு உறுதி செய்ய வேண்டும் என்று கேட்கின்றேன்.

அதே போல இத்தகைய நடக்காத ஒரு தேர்தலுக்கு நிர்வாக செலவாக 940 மில்லியன் ரூபா செலவு செய்ததாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

இது நான் பத்திரிகையில் பார்த்த விஷயம். இவ்வளவு பொருளாதார நெருக்கடியில் வேட்பு மனுக்களை எடுப்பதற்காக 940 மில்லியன் ரூபாவை செலவு செய்வது என்பது ஒரு வீண் விரயமாகத்தான் நான் பார்க்கின்றேன். மிகப் பெரும் தொகையான பணம் விரயம் செய்யப்பட்டிருக்கிறது. பல சந்தர்ப்பத்திலே அரசியல்வாதிகள் விரயம் செய்கிறார்கள், ஊழல் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் தொகையாக வந்து கொண்டிருக்கும். இதில் பல அதிகாரிகள் செய்யும் ஊழல் விடயங்களைக் கவனிக்காமல் விட்டு விடுகிறார்கள். இவற்றையும் நிச்சயமாக பிரதமர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

ஏனென்றால் அவர்களின் கீழே தான் முழுமையான அதிகார நிர்வாகம் இருக்கின்ற படியால் பிரதமர் அவர்கள்

தொடர்ச்சி ▼

# மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த நாடாளுமன்றில் சித்தார்த்தன் வலியுறுத்து

தொடர்ச்சி ▲

இந்த பொருளாதார மீட்சிக்கு செயல்பட்டு கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலே பொருளாதார மீட்சி என்பது எல்லாருமே ஒத்துச் செய்ய வேண்டிய ஒரு விஷயம்.

சிலர் செய்கின்ற பிழைகளால் பொருளாதாரம் வீழ்ச்சியிடைந்து கொண்டிருக்கிறது என்பது நிச்சயமான ஒரு விஷயம்.

மாகாண சபையை பற்றி சொல்லி இருக்கிறோம். அதை நடத்துவதற்கான கட்டாயமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக இன்னொரு விஷயம் அம்பாறை மாவட்டத்திலே கல்முனை தமிழ் பிரதேச செயலகம் 2015 ஆம் ஆண்டு இப்போது ஜனாதிபதியாக இருக்கின்ற – அன்று பிரதமராக இருந்த – ரணில் விக்கிரமசிங்க அதற்கு கணக்காளரை நியமிக்கப்போகிறோம் என்று தமிழ் கட்சிகளுக்கு உறுதியளித்தார். அப்போது வஜிர அபேவர்தன அமைச்சராக இருந்தார்.

பின்பு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று நியமிக்க கூடாது என்று கூற அது நியமிக்காமல் விடுபட்டுள்ளது.

மீண்டும் நாங்கள் செல்வோம். சென்று கதைக்கின்ற பொழுது நியமிக்கப்படும் என்பார்கள். பின் அதே முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர் நியமிக்க வேண்டாம் என்று சொல்லும் போது நியமிக்கப்படாமல் விடுபடும்.

அந்த சபை ஒழுங்காக நடக்காமல் இருக்கின்ற போது வேறு பல உபசபைகளுக்கு கணக்காளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். பிரதேச அலுவலகம் தரமுயர்த்தப்படுகின்றது. மிக நீண்டகாலமாக தமிழர்கள் இந்த கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதை செய்ய முடியாத நிலையிலே இந்த அரசாங்கம் இருக்கின்றது – வெறும் வாக்குக்களுக்காக. யாருடைய வாக்கு தேவை என்று நினைக்கின்றார்களோ அந்தப் பக்கத்திலே நிற்கின்ற நிலைமை இந்த நாட்டிலே இருக்கின்றது. இதையும் பிரதமர் கவனத்தில் எடுக்க வேண்டும்.

மேலும், வவுனியா நெடுங்கேணி பிரதேசத்திலே வெடி வைத்தகல்லு. அனுராதபுர மாவட்டத்தை சேர்ந்த ஒரு பகுதியை கொண்டு வந்து அதிலே இருக்க கூடிய கிராம நிர்வாகிகள் உடன் சேர்ந்து அதிலே இருக்கக்கூடிய கிராம நிர்வாகத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அந்த கிராமத்திலிருந்து நெடுங்கேணி பிரதேசசபைக்கு 30 கிலோமீற்றர் காட்டுப்பாதையால் வரவேண்டும். அந்த மக்களே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அனுராதபுர மக்களே எழுதி கொடுத்திருக்கின்றார். பிரதேச சபையிலே இருந்து தங்களை விட்டு விடுங்கள், மீண்டும் அனுராதபுரத்துக்கு போக வேண்டும் என்று. அதை செய்வதற்கு இந்த அரசு தயங்குகிறது. ஏனென்றால் அங்கே ஒரு திட்டம் இருக்கின்றது. நீண்ட காலமாக அந்த திட்டத்தை உருவாக்கப் பார்க்கிறார்கள்.

போகஸ்வேவ என்ற இடத்திலே ஏற்படுகின்ற குடியேற்றம். இந்த குடியேற்றத்தின் மூலம் பக்கத்துக்கு அனுராதாதபுரத்திற்குள்ள நிலங்களை சேர்ப்பது, அதிலிருக்கக்கூடிய மக்களை சேர்ப்பது வெளி மாவட்டத்திலிருந்து மக்களை குடியேற்றுவது, இதன் மூலம் வவுனியா மாவட்டத்துக்குரிய குடிப்பரம்பலை மாற்றுவதற்கான முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

இந்த முயற்சிகள் எல்லாம் எடுத்துக்கொண்டு ஒரு பொருளாதார வளர்ச்சியை பற்றி பேசுவது நிச்சயமாக நடைமுறைக்குச் சரிவராது.

ஏனென்றால் தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் முழுமனதுடன் இந்த செயல்பாடுகளில் பங்கு பற்ற வேண்டும். அவர்கள் முழு மனதுடன் செயல்பாடுகளில் பங்குபற்றுவதாக இருந்தால் அவர்கள் சரியான முறையிலே நடாத்தப்பட வேண்டும். அவர்களின் அரசியல் அபிலாசைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இதை நிச்சயமாக அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். – என்றார்.

# கென்யோன், விமலசுரேந்திர அணை நீர் தேக்கங்களில் நீர் வெளியேற்றம்!



(மஸ்கெலியா நிருபர் செ .தி.பெருமாள்)

மத்திய மலைநாட்டில் தொடர் மழை காரணமாகவும், நேற்று முன்தினம் மாலை வேளையில் பெய்த கன மழை காரணமாகவும் கென்யோன், விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்கங்களின் நீர் வெளியேற்றம் செய்யப்பட்டது.

காசல்ரீ நீர் தேக்கத்தின் மூலம் நீர் மின் உற்பத்தி செய்யும் முகமாக நோட்டன் பகுதியில் உள்ள விமலசுரேந்திர மின் நிலையத்தில் மின் உற்பத்தி செய்த பின்னர் வெளியேற்றம் செய்யும் நீர் மற்றும் ஒஸ்போன் பகுதியில் உள்ள அனைத்து நீர் ஓடைகள் மூலமும் பெறப்படும் நீர் ஆகிய்ச்வற்றால் விமலசுரேந்திர நீர் தேக்கத்தின் நீர் மட்டம் உயர்ந்ததால் தானாகவே நீர் வெளியேறும். அதற்கு அமைய தொடர்ந்து நீர் வெளியேற்றம் செய்ய பட்டு உள்ளது.

மேலும் இப் பகுதியில் கனத்த மழை காரணமாகவும் கென்யோன் நீர் மின் நிலைய அணையில் மவுஸ்சாக்கலை ஓயா பகுதியில் கன மழையாலும், மவுசாகல நீர் தேக்கத்தின் நீர் மூலம் மின் உற்பத்தி செய்த பின்னர் நீரை வெளியேற்றம் செய்ய கென்யோன் நீர் மின் நிலைய அணையில் இருந்து நீர் வெளியேற்றம் செய்ய பட்டு வருகிறது.

இதனால் தாழ் நிலப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என நீர் மின் நிலைய அதிகாரி மற்றும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட இருவரும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




# கொக்குத்தொடுவாயை மனிதப் புதைகுழியை ஒட்டிய வீதிக்குக் கீழும் அதிக எண்ணிக்கை மனித எச்சங்கள்

## அது குறித்து இன்று நீதிமன்றத்தில் முடிவு

## இதுவரையில் 39 மனித எச்சங்கள் மீட்பு!

(சண்முகம் தவசீலன்)

கொக்குத்தொடுவாயை மனிதப் புதைகுழியை ஒட்டிய வீதியில் பெருமளவான மனித எச்சங்கள் இருக்கலாம் என அச்சம் அடைவதோடு, நீதிமன்றில் அது தொடர்பாக நாளை (இன்று) தீர்வு எட்டப்படும் என சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் நேற்றுத் தெரிவித்தார்.




கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியின் எட்டாவது நாள் அகழ்வு நேற்றையதினம் நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொக்குதொடுவாய் மனித புதைகுழியில் இதுவரை 39 மனித எச்சங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இது நான்கு அடி, பதின்நான்கு அடி நீள அகலமுள்ள குழியில் அகழ்வுப்பணி இடம்பெற்று வருகின்றது. இது தமிழீழ விடுதலை புலிகளின் உடலங்கள் என நம்பப்படுபவை.

அத்தோடு கடந்த தினங்களில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனையில் வீதிக்கு மேற்கு பக்கமாக உள்ள வீதிக்குள் மனித எச்சங்கள் இருக்கின்றன என நம்பப்படுகின்றது. அது தொடர்பாக நீதிமன்றில் நாளை(இன்று) ஒரு கலந்துரையாடல் இடம்பெற்று இது தொடர்பாக ஒரு தீர்வினை பெறமுடியும் என நம்புகிறோம்.

இந்த அகழ்வுப்பணி, இரண்டாம் கட்டமாக தொடர்ச்சியாக எட்டு வாரங்கள் இடம்பெறலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. நாளையுடன்(இன்றுடன்) இந்த முதலாம் கட்டம் நிறுத்தப்படலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது.

அதற்கான செலவுத்தொகை தீர்மானிக்கப்படும்.

அத்தோடு பெருமளவான மனித எச்சங்கள் அந்த பகுதிக்குள் இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்த அகழ்வுப்பணி நாளையும் (இன்றும்) தொடர இருக்கின்றது. இதுவரை விடுதலை புலிகள் என சந்தேகிக்கும் 39ஆண், பெண் மனித உடல் கூட்டு தொகுதிக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. - என அவர் மேலும் தெரிவித்தார்.



# இரட்டை பிள்ளைகளை பிரசவித்த தாய்
# அம்மை வருத்தம் தீவிரமாகி உயிரிழப்பு!





இரட்டை பிள்ளைகளை பிரசவித்த தாய் ஒருவருக்கு அம்மை வருத்தம் தீவிரமாகி நீயூமோனியா ஏற்பட்டு குழந்தை பிரசவித்த சில நாள்களில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தொண்டமானாறு – வல்லை வீதியை சேர்ந்த நி.விதுசா என்ற 25 வயதான இளம் தாயே உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரட்டை குழந்தையை குழந்தையை சத்திர சிகிச்சை (சிசேரியன்) மூலம்பிரசவித்தார் என தெரிவிக்கப்படுகிறது.

குழந்தை பிறந்து ஒரு சில நாள்களில் தாய்க்கு அம்மை வருத்தம் ஏற்பட்டுள்ள நிலையில் தொற்றுப் பரவும் எனக் கருதி பெண்ணை வீட்டுக்குச் செல்லுமாறு வைத்தியர்கள் பணித்துள்ளனர்.

தாயும் குழந்தைகளும் வீடு திரும்பிய நிலையில் தாய்க்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டு நெல்லியடியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

அங்கிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்று பரிசோதனையில் உயிரிழந்த பெண்ணுக்கு அம்மை வருத்தம் தீவிரமாகி நீயூமோனியா ஏற்பட்டு நுரையீரலை பாதித்ததால் உயிரிழப்பு ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

உடலின் சில பாகங்கள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

# அம்பாறையில் மகளை வன்புணர்வு செய்த தந்தை தன்னைத்தானே சுட்டு தற்கொலை!



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தனது மகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட அம்பாறை, பன்னலகம பிரதேசத்தைச் சேர்ந்த தந்தை பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளத் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

அம்பாறை, பன்னலகம 2 சீ, குமண பிரதேசத்தைச் சேர்ந்த தந்தையொருவர் தனது மகளைத் தொடர்ச்சியாகப் பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார்.

6 மாதங்களுக்கு முன்பு அவரின் மனைவி குடும்ப கஷ்ட நிலை காரணமாக மத்திய கிழக்கில் வீட்டுப் பணிப் பெண்ணாகச் சென்றுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மகள் தாயிடம் முறையீடு செய்த செய்த நிலையில் இந்த விடயம் தந்தைக்குத் தெரிய வந்ததால் இது சம்பந்தமாகப் பொலிஸாருக்கு அறிவித்தால் தனது இரண்டு பிள்ளைகளையும் கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்து விடுவதாக மனைவியைக் கணவன் மிரட்டியுள்ளார்.

மனைவி இந்த விடயம் தொடர்பில் தமண பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்ததையடுத்து தமண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மனோஜ் திஸாநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பந்தப்பட்டவரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

அப்போது அவர் பொலிஸாரைக் கண்டதும் பொலிஸார் தன்னைக் கைது செய்யப்போவதாக அறிந்து வீட்டுக்குள் ஓடி துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அம்பாறை பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி நந்தன ஜயபத்ம தலைமையிலான தமண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் கட்டியம் புகழ் பிரசன்ன குருக்கள் பாடிய திரைப்படப் பாடலுக்கு வரவேற்பு!




யாழ்ப்பாணம் – நல்லூர் கந்த சுவாமி கோவிலில் “கட்டியம்“ சொல்லி பிரசித்தி பெற்ற பிரசன்ன குருக்கள் பாடிய திரைப்பட பாடல் ஒன்று பெரும் வரவேற்பை பெற்றுள்ளதுடன் பலரின் பாராட்டுக்களையும் பெற்று வருகிறது.

தென்னிந்திய திரைப்பட இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் இப்பாடலை தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டு, பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

ஈழத்து இளைஞர்களால் தயாரிக்கப்பட்டு பெரும் வெற்றி பெற்ற ‘புத்தி கெட்ட மனிதரெல்லாம்’ திரைப்படத்தினை தொடர்ந்து, அந்தப் படத்தின் இயக்குனர் ராஜ் சிவராஜ் இயக்கத்தில் ‘டக் டிக் டோஸ்’ எனும் திரைப்படம் உருவாகி வருகிறது.

வெகு விரைவில் திரைக்கு வர இருக்கும் இந்த திரைப்படத்தின் பாடல் ஒன்றை நல்லூரில் ‘கட்டியம்’ சொல்லி பிரசித்தி பெற்ற பிரசன்ன குருக்கள் பாடியுள்ளார்.

திரைப்படத்தின் இசையமைப்பாளர் பூவன் மதீசன் பாடலுக்கு இசை அமைத்துள்ளார். பாடல் வரிகளை சாந்தகுமார் எழுதியுள்ளார்.

குறித்த பாடல் TRM Pictures youtube தளத்தில் அண்மையில் வெளியாகிய நிலையில், பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. பலரும் பாடகரான, பிரசன்ன குருக்களின் குரலை வெகுவாகப் பாராட்டி வருகின்றனர்.

# யாழில் மலையகத்தை உணர்வோம்

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்துடன் யாழ்ப்பாண சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து நடத்தும் “யாழில் மலையகத்தை உணர்வோம்“ எனும் கருப்பொருளிலான பெரு நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கத்தில் இடம் பெறவுள்ளது.

நவம்பர் 30, டிசம்பர் 1,2,3 ஆகிய தினங்களில் காலை 9.00மணி முதல் 6.00மணிவரை இடம் பெறும் இந்நிகழ்வில் மலையக மக்களின் வாழ்வு, சவால்கள், அடைவுகள் மற்றும் நிலைமை என்பவற்றைப் பிரதிபலிக்கும் நடமாடும் அருங்காட்சியகம், கண்காட்சி, கலை நிகழ்வுகள், ஆவணம் திரையிடல், அரசியல் – புலமை பகிர்வு மற்றும் ஆற்றுகை நிகழ்வுகளில் மலையகத்தின் 200 வருடகால வரலாற்றுப் பயணத்தை உணர்ந்து கொள்ளவும், மலையக மக்கள் எதிர்பார்க்கும் அடைவுகளை பெற உணர்வு ரீதியாக ஆதரவளிக்கும் வகையில் இடம்பெறவுள்ளது.

# உத்தராகண்டில் சுரங்கத்தினுள் சிக்கிய 41 தொழிலாளர்களும் பத்திரமாக மீட்பு!

## முழு இந்திய நாடும் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில்




**(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)**

உத்தராகண்ட் மாநிலத்தின் சில்க்யாரா சுரங்கத்தில் கடந்த 17 நாள்களாக சிக்கியிருந்த 41 தொழிலாளர்களையும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் பத்திரமாக மீட்டனர். இந்த அபார மீட்புப் பணியின் வெற்றியை முழு இந்திய நாடே மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகிறது.

உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசி சுரங்கப் பாதையில் குழாய் பதிக்கும் பணிகள் நிறைவடைந்து விட்டதாக, அம்மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி தெரிவித்திருந்தார்.

உத்தராகண்டில் சில்க்யாரா – பர்கோட் இடையே அமைக்கப்படும் சுரங்கப் பாதையில் கடந்த 12 ஆம் திகதி மண் சரிவு ஏற்பட்டது. இதில்,41 தொழிலாளர்கள் சுரங்கப் பாதைக்குள் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்பதற்காக, அமெரிக்க தயாரிப்பான ஆகர் இயந்திரம் மூலம் பக்கவாட்டில் துளையிடப்பட்டது. ஆனால், அந்த இயந்திரத்தின் பிளேடு, கம்பிகளில் சிக்கி உடைந்து சுரங்கப் பாதையில் சிக்கிக் கொண்டது. இதனால், அந்த இயந்திரத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து, பல்வேறு வியூகங்கள் வகுக்கப்பட்டு மீட்புப் பணிகள் வெற்றிகரமாக இறுதிக் கட்டத்தை எட்டியது.

இடிந்து விழுந்த சில்க்யாரா சுரங்கம் இறுதியாக உடைக்கப்பட்டு விட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்ததால் உள்ளே சிக்கியிருந்த தொழிலாளர்களின் குடும்பத்தினர் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. மீட்புப் பணிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்ட நிலையில், 41 தொழிலாளர்களையும் பத்திரமாக வெளியே கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடங்கி நடைபெற்று வந்தது. மீட்புப் பணிக்களத்தில் தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்பு படைகளைச் சேர்ந்த வீரர்கள் கயிறு, விளக்குகள், ஸ்ட்ரக்சர்கள் போன்ற உபகரணங்களுடன் சுரங்கத்தின் முன்னால் காத்திருந்தனர். இந்தச் சிக்கலான மீட்பு திட்டத்தின் ஒரு பகுதியாக தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் தேவையான உபகரணங்களுடன் குழாய் வழியாக மறுமுனைக்கு முதலில் உள்ளே சென்று அங்கு சிக்கியிருந்த தொழிலாளர்களுடன் தொடர்புகொண்டு, அவர்களின் தற்போதைய நிலையின் ஆய்வு செய்து, பாதுகாப்பாக வெளியேறுவதற்கான வழிகளைத் தெரிவித்தனர்.

இந்நிலையில், 17 நாள்களுக்குப் பின், சுரங்கத்தில் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களையும், தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் பத்திரமாக மீட்டு வெளியே கொண்டு வந்தனர். ஒருவர் பின் ஒருவராக சுரங்கத்தில் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். முதலாவது நபர் வெளியே வந்தபோது, சுரங்கத்தின் வெளியே காத்திருந்த மீட்பு பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், உறவினர்கள், பொதுமக்கள், ஓட்டுநர்கள் என அனைவரும் கைகளைத்தட்டி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

சுரங்கத்தில் இருந்து முதலில் 5 தொழிலார்கள் மீட்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து நடந்த மீட்பு பணிகளின் மூலம் 15 தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர். பின்னர் 33 தொழிலாளர்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில், 8 தொழிலாளர்களை மீட்க வேண்டி இருந்தது. இறுதியாக சுரங்கத்தினுள் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களும் முழுமையாக மீட்கப்ட்டனர். சுரங்கத்தில் இருந்து வெளியே வந்த தொழிலாளர்கள் ஒவ்வொருவரையும், உத்தராகண்ட் மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி மாலை அணிவித்து ஆரத்தழுவி வரவேற்றார். 41 தொழிலாளர்கள் மீட்கப்பட்டதற்கு, இந்தியா முழுவதும் மக்கள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

சுரங்கத்தில் இருந்து வெளியே வந்த தொழிலாளர்கள் நேரடியாக அம்புலன்ஸ்ʼக்கு அழைத்து வரப்பட்டு, அங்கு அவர்களுக்கு அடிப்படையான முதலுதவி சிகிச்சைகள் அளிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும், தொழிலாளர்கள் அனைவரும் ஒருநாள் மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டு, பரிசோதனைகளுக்குப் பின்னரே, அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தகவல் வெளியாகி உள்ளது.





# கல்லறைகளுக்கு மட்டும் வருடம் தோறும் ஒளியேற்றாமல்

# கனவுகளைச் சுமந்த மக்களுக்கும் நிரந்தர ஒளி தருவோம்

## இப்படி அழைக்கின்றது ஈ.பி.டி.பி. அமைப்பு

வருடாவருடம் கல்லறைகளுக்கு மட்டும் ஒளியேற்றிக் கொண்டிருக்காமல் கனவுகளைச் சுமந்த மக்களுக்காகவும் எமது மண்ணில் நிரந்தர ஒளியை ஏற்ற வேண்டும். அதற்காகவே நாம் முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உரிமைப் போராட்டத்திலும் அழிவு யுத்தத்திலும் உயிர் நீத்த அனைத்து இயக்கங்களின் போராளிகளுக்கும் மக்களுக்கும் நாம் செலுத்தும் அஞ்சலி என்பது அவர்கள் என்னென்ன கனவுகளை எண்ணி உயிர் நீத்தார்களோ அந்த மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் ஒன்றாக எண்ணி ஒளியேற்ற வேண்டும்.

அதுமாத்திரமல்லாது, அந்தக் காலப்பகுதியில் உயிர் நீத்த மக்களின் கனவுகளையும் மாறா வடுக்களையும் இன்றும் சுமந்தவாறு வாழ்ந்து கொண்டிருக்கும் உறவுகளின் வாழ்வும் சிறப்பானதாக அமைவதற்கு ஏற்றவகையில் நிரந்தர ஒளி ஏற்றப்பட வேண்டும்.

நாட்டை அச்சுறுத்தி வந்த அழிவு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் சுமார் 12 ஆயிரத்து 522க்கு மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வு பெற்று பொதுவாழ்வில் ஈடுபட்டவருகின்றனர். அவர்களது விடுதலையில் நாம் கணிசமான பங்காற்றியுள்ளளோம்.

ஆனாலும் அவர்களது வாழ்வாதாரம் எந்த நிலையில் உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். அதே போன்று உரிமைப் போராட்டத்தில் இணைந்து போராடிய அனைத்து இயக்கப் போராளிகளின் வாழ்வியலும் ஏதோ ஒரு வகையில் பின்னடைவாகவே இருந்து வருகின்றது.

அவ்வாறு வாழ்வாதாரத்தில் பின் தங்கியுள்ள அனைத்து இயக்க போராளிகளுக்கும் அவர்களின் வாழ்வாதாரம் பொருளாதார ரீதியில் சிறப்பானதாக உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக விசேட நிதி ஒதுக்கீட்டை ஜனாதிபதியிடம் கோரவுள்ளோம்.

குறிப்பாக யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு விஷேட நிதி ஒதுக்கீடு உள்ளது போல அழிவு யுத்தத்தில் உயிர் நீத்த அல்லது நிரந்தர பாதிப்புகளை சந்தித்துள்ள அனைத்து இயக்க போராளிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யுமாறே ஜனாதிபதியிடம் கோரவுள்ளோம்.




இதேவேளை 1995 சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் இராணுவப் பிரசன்னத்துக்கு மத்தியிலும் பயங்கரவாத தடைச்சட்டம், அவசர காலச் சட்டம் என்பன நடைமுறையில் இருந்த சமயம் எமது மக்கள் தமது நியாயங்களுக்காக போராட்டங்களை நடத்த முடியும் என்ற சூழலை உருவாக்கியது நாம் தான்.

அவ்வாறு ஒரு நிலைமையை நாம் அன்று உருவாக்கியதன் வெளிப்பாடே இன்று இத்தகைய நிகழ்வுகளுக்கு களமமைத்துக் கொடுத்துள்ளது. மக்கள் மென்போக்குடன் போராடி தமது உரிமையை நிலை நாட்டுவதை நாம் வரவேற்கின்றோம்.

அதேவேளை எமது இனத்தின் உரிமைக்கான யுத்தத்தில் உயிர் நீத்த அனைத்து இயக்க போராளிகளினதும் நினைவாக பொதுத் தினம் ஒன்றை அங்கீகரிக்குமாறு தலைவர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் தனி நபர் பிரேரணை ஊடாக அங்கிகாரத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

கடந்த நல்லாட்சி என்ற அரசின் ஆட்சியின் போது நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையை சமர்ப்பித்து பெரும் விவாதத்தின் பின்னர் நாடாளுமன்றம் அதற்கு அங்கீகாரமும் வழங்கியுள்ளது.

ஆனாலும் பின்னர் ஏற்பட்ட கொரோனா தாக்கங்கள், நாட்டின் பொருளாதார நெருக்கடிகள், ஆட்சி மாற்றங்கள் காரணமாக அந்தப் பிரேரணை நடைமுறைக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனவே யுத்தத்தில் இறந்த அனைத்து இயக்க போராளிகள், பொது மக்களை நினைவு கூரும் பொதுத் தினத்தை செயற்படுத்த சமூகத்திலுள்ள புத்திஜீவிகள், சமூக அக்கறையாளர்கள், சமயத் தலைவர்கள் என அனைவரும் பங்காற்ற வேண்டும்.

அதனூடாக கல்லறைகளுக்கு மட்டும் தொடர்ச்சியாக ஒளியேற்றிக் கொண்டிருக்காமல் கனவுகளை சுமந்த மக்களுக்காகவும் எமது மண்ணில் நிரந்தர ஒளியையும் ஏற்ற அனைவரும் முன்வரவேண்டும்.

புலிகள் அமைப்பின் தலைவரின் மகள் துவாரகாவின் பெயரால் வெளியாகியுள்ள உரையில் உண்மைத் தன்மை இருக்குமாக இருந்தால் அதனை நாம் வரவேற்போம்.

புலிகள் இயக்கத்தின் முத்த உறுப்பினர்கள், தளபதிகளாக இருந்தவர்கள் மற்றும் இராணுவ தரப்பு உயரதிகாரிகள் புலிகளின் தலைவர் உட்பட அக் குடும்பத்தினர் அனைவரும் யுத்தத்தில் உயிர் நீத்தவிட்டார்கள் என்பதை மிகத் தெளிவாக கூறியுள்ளார்கள்.

ஆயினும் துவாரகாவின் பெயரால் ஓர் அணியினர் அவர் உயிருடன் இருக்கிறார் எனவும் அவர் பேசிய உரை என தெரிவித்து ஓர் உரையையும் வெளியிட்டுள்ளனர்.

அந்த உரையில் சர்வதேசம் தீர்வை வைத்தால் பரீசீலிப்போம் எனவும், அரசியல் போராட்டங்கள் ஊடாகவே தீர்வைப் பெறமுடியும் எனவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளனர்.

அதனடிப்படையில் அந்த செய்தியில் உண்மைத் தன்மை இருக்குமென்றால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அதனை வரவேற்கின்றது.

ஏனெனில் நாம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னர் அரசியல் ரீதியாகவே எமது மக்களுக்கான அரசியல் உரிமைக்கு - தீர்வுக்கு - முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

அதே போன்றே துவாரகாவின் பெயரால் இந்த உரையை வெளியிட்ட குழுவினர் அந்த மென்மையான சொல் வடிவத்தையே வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய மென்போக்கு தன்மையுடைய நிலைப்பாட்டை அந்தத் தரப்பினர் முன்கூட்டியே எடுத்திருப்பார்களாக இருந்தால் இவ்வாறான பேரழிவு ஏற்பட்டிருப்பதை தவிர்த்திருக்க முடியும். துவாரகாவின் பெயரால் நிதி சேகரிப்பு மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருவதையும் தடுத்திருக்க முடியும். எனவே இது தொடர்பாக புலம்பெயர் சமூகம் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். - என்று அவர் கூறினார்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.11.2023




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை. இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம். பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள் அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் / மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.11.2023




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park